உ

பரமபதி துணை

திருச்சிற்றம்பலம்

கச்சமங்கலம்

அகண்ட பரப்பிர்மமாகிய

சொக்கனாதக்கடவுள் மீனாம்பிகை

சுப்பிரமண்யக் கடவுள் தாண்மலர்கட்குத்

# திருக்கச்சமாலை
# உயிர்வருக்க மாலை
# இரட்டைமணி மாலை
# தனித்துறைகள்

இந்நான்கும்,

கச்சமங்கலம்.

இயற்றமிழ்ச்சங்க அக்ராசனாதிபதி

ஸ்ரீமான்

**சோ. சிங்காரவடிவேல் வன்னிய முண்டார் அம்பலகாரர்**

அவர்களால் இயற்றியது.

---

இஃது.

வித்வான்

மகா-ள-ள-ஸ்ரீ

**த. சு. அப்பாவுப்பிள்ளை அவர்களாற்**

சிறப்புப்பாயிரஞ் சேகரிக்கப்பட்டு

**தஞ்சை**

கல்யாணசுந்திரம் முத்திராசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

விரோதிகிருதஸு

கன்னிரவி

1911

# முகவுரை.

---

முகவுரை நுதலீஇ முடிதற்பொருட்டுப்
பகவன்றிருவடீஇ பழிச்சுதுமியாமே.

அக்கரங்களுக்கு முதலாக வியங்குமகரத்தைப்போல் உலகின்கண் எல்லாப்பசுக்களுக்கும் பதியாகவிக் கச்சமங்கலப்பதியில் விளங்குஞ் சிவபிரான் திருவடியின்கண் அன்புகசிந்து இந்நூலாசிரியர் பிரதமத்தில் திருக்கச்சமாலையில் 2-வது செய்யுள் 'கச்சநகரரன்' என்றதும், 3-வது செய்யுள் 'தண்ணம்பலவன்' என்றதும், தனித்துறைகளில் முதலாவது செய்யுள் 'கத்திகைக்கும்பாரரி' என்ற கவியுமாகியவிம் மூன்றுகவியும், அருட்கவியாக இந்நூலாசிரியர் தனது இளம்பருவமாகிய 16-வயதில் இயற்றியருளினார். இக்கவிகள் தானெடுத்துக்கொண்டயமகத்துக்கு இடையூறாகச் சில மாறுதல்கள் ஏற்பட்டிருந்தும் இஃதையுமிப்பிரபந்தத்தில் சேர்த்தது யாதெனில் அருளாக ஏற்பட்டதைத் தள்ள மனமிசையாததேயாம். எமர்கள் அறிந்த இக்குற்றத்தை ஆன்றோர்மனம் பொருக்க இம்மூன்று கவியுமியற்றினதும் இந்நூலாசிரியர் இன்னுமுழுவலன்பினாற்றிருக்கச்சமாலை 30 கலித்துறையும், மீனாம்பிகை உயிர்வருக்கமாலை 12 பன்னிருவிருத்தமும், சுப்பிரமண்யக்கடவுள் இரட்டைமணிமாலை 20 செய்யுளும், தனித்துறைகள் 20 கவியுமியற்றியருளினார். இந்நூலாசிரியர் புலத்தின் பெருமை யிச்சிறு நூலினால் நன்கு புலப்படுமிதை விரிக்கிற் பெருகுமென்றஞ்சி யித்துடனிறுத்தினேம். இக்கச்சமங்கலமென்ற பதியானது, கச்சமங்கலமென்றுங் கச்சைமங்கலமென்றும் விளங்குகிறதினாலுமிந்நூலாசிரியருஞ்சில செய்யுளிற்றிருக்கச்சமென்றுஞ்சில பாக்களிற்றிருக்கச்சை யென்றும் விவரித்திருக்கின்றனர். நான் இஃதெழுதப்புகுந்ததியாதோவெனின் இந்நூலாசிரியருமியானு மொருகலாசாலைமாணாக்கர்களாகமேல்வளம் மகா-ள-ஸ்ரீ வே. வீரப்பசெட்டியார் அவர்களிடத்திற் கல்விபயின்றதனாற் "றன்னொடுகற்றோன் பாயிரமியம் புதல் கடனென்று" வழக்கிருப்பதால் இம் முகவுரையைத் துணிந்தியம்பினேன். கற்றோர் யாவரும் பிழைபொறுத்தருள் வாராக. இந்நூலாசிரியருக் கிவ்வளவு சிறு பருவத்திலிவ்வறிவைக்கொடுத்த எல்லாம் வல்லகடவுளிவருக்குப்பூரண வாயுளைக்கொடுக்கும் பொருட்டவரெழின் மலர்ப்பதத்தை இறைஞ்சுகின்றனென். சுபம்.

இங்ஙனம்,

**கா. நடேசமழவராயர்,**
உபாக்ராசனாதிபதி,
இயற்றமிழ்ச்சங்கம்,
கச்சமங்கலம்.

ஓம் ப்ரப்பிரமணேநம:

## சிறப்புப்பாயிரம்.

கச்சமங்கலம் இயற்றமிழ்ச்சங்க அங்கம் சேர்ந்தவரும் திருப்பையூர்க் கிராமம் மிராஸ்தாருமாகிய,

மகா-௱-௱-ஸ்ரீ இரகுபதிமழவராயர் அவர்களாலியற்றியது.

சீரார்பலா வாழைசெய்ய திராட்சை யெனப்
பாரார் புலவர்சொலும் பாட்பொருள்க—ளேராரும்
சிங்காரவேற்கவிஞன் செய்கச் சமாலையின்சொல்
தெங்காயின் ஒண்பழமாச்செப்பு (௧)

---

கச்சமங்கலம்.

இயற்றமிழ்ச்சங்கக்காரியதரிசியும், அம்பலகாரருமாகிய

ஸ்ரீ மா ன்

வேங்கடசுப்புவன்னியமுண்டார் அவர்களாலியற்றியது.

கச்சைப்பரனுமைசேய் கான்மலரின் மேனுலகு
இச்சையுறு மாலைகளையேத்தினன்—விச்சையுறு
சிங்காரவேலெனச் சொல்செல்வனென் சகோதரன் வாய்ச்
சிங்காரமென்ன சொல்வேன் சீர் (௧)

---

இஃது:

தஞ்சையைச் சேர்ந்த வெள்ளாம்பிரம்பூர்க் கிராமம் மிராஸ்தார்

மகா-ா-ா-ஸ்ரீ துரைசாமிச் சோழகர் அவர்களாலியற்றியது.

மாலையென்று சொல்லும் மயக் கொழிக்குங் கச்சநகர்
மாலையென்று சொல்ல வழுத்தினன்பன்—னூலையுணர்
சிங்காரவேற் புலவன் செப்பெமகச் செம்பொருணச்
சிங்காரவேற் புலவான் சீர். (க)

---

இஃது

தஞ்சையைச் சார்ந்த காங்கேயன்பட்டி அம்பலகாரர் சமஸ்தான வித்வானும், கச்சமங்கலம் இயற்றமிழ்ச்சங்கம் சேர்ந்தவரும் ஆகிய தவத்துறை வித்வான்

மகா-ா-ா-ஸ்ரீ சு. அப்பாவுப்பிள்ளை அவர்களாலியற்றியது.

திருக்கச்சமாலைதனைத்தீர்த்தருளப்பரமசிவன்றிருத்தாண்மீது
திருக்கச்சமாலைபுனைந்தான்புலவர்கண்டுபெயந்தேமென்றூர்நத்
திருக்கச்சமாலைதனின்மாலையாய்ப்புடைசூழ்ந்துதிரியானிற்குந்
திருக்கச்சமாலை நிகர்சிங்காரவடிவேற் செந்தமிழ்ச்சிங்கேறே (க)

---

உ
இஃது

தஞ்சையைச்சார்ந்த
பொன்விழைந்தபட்டி—சின்னுவேளார் குமாரரும்,
கச்சமங்கலம் இயற்றமிழ்ச்சங்க அங்கத்தினர்களிலொருவருமாகிய
மகா-ளா-ளா-ஸ்ரீ அருணாசலவேளார் அவர்களாலியற்றியது.

சீரார்பொன்னி யேரார் தென்கரை
விண்ணதிவடபாற் கண்ணிறைகமலந்
தென்னைவண்கதலிநற் புன்னைபூகஞ்சூழ்
கச்சநன்ன கரிற்சச்சிதானந்தமாய்
வாழ்சிற்பரன் மேற்றாழ்விலாமாலை
துங்கநற்சுமுகமாற்சிங்காரவடிவேல்
வன்னியமுண்டார் நன்னயமுடனே
பாரிற்பரிந்து கொண்டாடச்
சாற்றிநற்கீர்த்தியை யேற்றினன்மாதோ (க)

இஃது

இயற்றமிழ்ச்சங்க அங்கத்தினர்களிலொருவராகிய வரும்—கச்சமங்கலம் சமஸ்தானவித்வானுமாகிய

மகா-ளா-ஸ்ரீ ஐ. காசிநாதப்புலவர் அவர்களாலியற்றியது

தார்விடையோனுமை வேற்குகன்றுமரைத்தாளினலம்
ஏர்பெறுமாலைகளேத்தித்துதித்தனன்யாவனெனில்
நீர்பெறுஞ் செம்பணைக்கச்சையைக்காவல்செய் நீள்புகழான்
பார்பெறுஞ் சிங்காரவேலியற் கல்வியிற் பாண்டியனே (க)

இஃது

திருநெல்வேலி ஜில்லா சொக்கம்பட்டி ஜமீன் சமஸ்தான வித்வான் திருவேட்டநல்லூர்

மகா-ா-ா-ஸ்ரீ ச. அப்பாச்சாமிக்கவிராசர் அவர்களாலியற்றியது.

மாலும்பரவைகட்கமுதைவாயாலுணமேருவையசைத்தாற்
போலும்பரவையிற்றாதுபோனேன் மேற்கச்சமாலையைக்கோ
காலும்பரவை புவிக்கவிஞர்காதாலுண வேயிக்குமத
னாலும்பரவைச் சிங்காரவேலுவசைத்தானண்புரவே (க)

இரதவெண்பா

காண்டவிழியுமை பாலகானத்தமிழினைக்கால்
வேண்டியுயிர்வருக்க மீசரமாய்ப்—பூண்டோனே
காரணைத்துமோட்டுங்கரதலச் சித்தானரகு
வீரசிங்காரவடிவேல் (2)

வன்னிமுண்டார் தருவுறையுங் கச்சைநகருறுமதனும் வம்பார் கொங்கை
வன்னிமுண்டாரகத்துறையுமரன் குருவாங் கடலாடைவணைந்த
வன்னிமுண்டாரரிமருகற் பரவிச்சிங்காரவடிவேன்மாலிந்ர[வான
வன்னிமுண்டார்குலதிலகனிரட்டைமணிமாலைதனைவழுத்தினனே

---

இஃது.

தஞ்சையைச்சார்ந்த மாற நெறிக்கிராமம் மிராஸ்தாரும் கச்சமங்கலம் இயற்றமிழ்ச்சங்க அங்கத்தினர்களிலொருவருமாகிய,

மகா-௱-௱-ஸ்ரீ அண்ணுச்சாமியுடையார் அவாகளாலியற்றியது.

கச்சமங்கலத்துரை சிங்காரவடிவேற்புலவன்
பச்சைமங்கலப்பெண்ணிடப்பாகபரர்க்—கிச்சைபெறப்
பாடினதென்கச்சையமகத்துடைப்பாக்கேட்டுளற
வாடினதென் குன்றமுனிவன் (க)

---

இஃது

தஞ்சையைச்சார்ந்த மேல்வளம் மகாவித்துவான் வீரப்பசெட்டியார் அவர்கள் குமாரரும் கச்சமங்கலம் இயற்றமிழ்ச்சங்கத்தினர்களிலொருவரும் தமிழ்ப்புலமையுருள்ள,

மகா-௱-௱-ஸ்ரீ குருநாதசெட்டியார் அவர்களாலியற்றியது.

சீரார்கருமிடற்றேவன்றன் மேற்றிருமாலையொன்று
யேரார்புலவரர்கண்டெனக்கொண்டுணவேத்தினன்மால்
காரார் பொழிற்கச்சமங்கல நற்பதிக்காவலநற்
பாரார்திருக்குணச்சிங்காரவேலெனும் பாவலனே (க)

---

இஃது

திரிசிரபுரம்

சர்க்கார்பேட்டையில் உப்புவியாபாரியும் உபாத்தியாயருமாகிய

மகா-௱-௱-ஸ்ரீ தி. கு. சோமசுந்தரம் பிள்ளை அவர்களாலியற்றியது.

சீர்மணக்கும் கச்சநகர்ச் சிவன்றளிலொருமாலை திகழ்சிவத்தி
னூர்மணக்குஞ்சிவைதாளிலொருமாலை குமரனிருநளினத்தாளி
லேர்மணக்குமொருமாலையியற்றமிழோர் மனங்களிப்பவியற்றிச்
சேர்த்தான்
பேர்மணக்குஞ்சிங்காரவடிவேலன்ஞேன்பெருமை பேசற்பாற்றே

---

இஃது

தஞ்சைமாநகரம்

புராணப்ரசங்கசபை பிரசங்கத்தலைவர்

மகா-ள-ள-ஸ்ரீ சிவ. சோலைமுத்துப்பிள்ளை அவர்களாலியற்றியது.

உலகுய்யக்கச்சைநகர்த்திருக்கோயில்கொண்டபரனுமைசெவ்வே
[லோன்
இலகுறுநற் றிருவடிகட் கணிமாலையழகு பெறவியம் பினனல்
நலமிகுமவ்வூரினியற்றமிழ்ச்சங்கத்தலைமைதனைநடாத்திவாழும்
புலமைமிகுசிங்காரவடிவேலனெனும்பெயரைப்பூண்டோன்மா
[தோ

---

இஃது

தஞ்சைமாநகரம்

இ-எ ல்-எம்-பெண்கள் பெரியபாடசாலைத் தமிழ்ப்பண்டிதரும் இலக்கண உபாத்தியாயருமான

மகா-ஈ-ஈ-ஸ்ரீ எம். பொன்னுச்சாமிபிள்ளை அவர்களாலியற்றியது.

பொன்னியென்றுலகு போற்றுமாநதியிற் போங்தொழுகரியவிண்
[ணதியின்
பொருந்திடைநிலத்துக்கல்லணை மருங்கிற்புகழ்கச்ச மங்கலப்பதி
[யோ
வன்னியமுண்டாரெனு முயர்மரபோமற்ற வற்ற ரசியன்மகிபன்
மாத்துரைச்சொக்கநாதனே வவன்முன்மரபுளோ ரெவர்புரிதவ
[மோ
துன்னியப்பதியிலவற்கு நன்மகவாய்த்தொல் குலத்திலகமாய்த்
[தோன்றிச்
சூட்டினன்கச்சை யுயிர்வர்க்கத்திரட்டைச்சொன்மணிமாலைகள்
[பெற்று
னின்னிலவடைந்த சென்னியனுமை சேயிவரருள்கற்றதன்பயனு
விசைநிலம்பரவு சிங்காரவடிவேலெனு மியற்பெயரினன் மாதோ.

---

இஃது
தஞ்சையைச்சார்ந்த கூடலூர்

மகா-ஈ-ஈ-ஸ்ரீவே. இராமசாமிவன்னியர் அவர்களாலியற்றியது.

சிங்காரவடிவேற் சீர்க்கவிஞன்கச்சையில்வாழ்
பங்காளுமம்மை பரன்வேட்குக்—கொங்காரு
மச்சுவர்க்கமாலைகச்ச மாலைமணியாரமெனு
மெச்சுதமிழ்ப்பாப்புனைந்தான்மிக்கு (க)

---

இஃது

இரங்கூன்

பாண்டியன்பத்திராதிபர்

மகா-ள-ள-ஸ்ரீ ஆ. சத்திவேற்பிள்ளை அவர்களாலியற்றியது

விண்பூத்தபொழிற்கச்சமங்கல நல்வியன்பதியில் விண்ணோர்போ
[ற்றுங்
கண்பூத்தநுதற்பரமன் கௌரிகுமரன்னிவர் தங்கமலத்தாட்குப்
பண்பூத்தயமகமுயிர்வருக்க மிரட்டைமணிமாலிகைபண்பாக
எண்பூத்தபுல்வர்குழாமினிது மகிழ்தரத்தமிழாலியாத்தீந்தானால்

அன்னவன்யாரெனிலறைவனங் கழனிப்பைங்கூழ்களழகுவாய்ப்
[பக்
கன்னலெனச்செழிகச்சமங்கலத்தி லுயர்குலத்திற்கற்றோர் நாளு
மன்னவனென்றேதுதிக்கவளர் செல்வங்கொடைகல் விவாய்மை
[யாதி
பன்னலமுஞ்சேர்ந்திலங்கு சிங்காரவடிவேற்பாவலவன்மாதோ(2)

சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.

---

ஓம்சிவாயநம.

# திருக்கச்சமாலை,

## காப்பு.

திங்கட்கொழுந் தணியுந்தேவன் மேலேயமகத்
துங்கத்தமிழ்மாலை சூட்டுதற்கு—எங்குநிறை
சுத்தப்பரம்பொருளாய்ச் சோதிமயமாயிலகு
மத்திமுகன்றாட்பூவரண்

## இதுவுமது

கச்சநகர்ப்பரமன் கண்ணகிலார்மாதிடங்கொள்
கச்சநகர்ப்பரமன் கட்செவியார்—கச்சநகர்
மாதங்கத்தானனத்தான் வாழ்த்தரன்மேன்மாலைசொல
மாதங்கத் தானனத்தான் மாண்பு

## அவையடக்கம்.

சீர்நெறிப்பார் மாமலரிற் சேர்ந்துறையும் பேரனங்கள்
நீர்பிரித்துப்பாலருந்து நீர்மைபோற்—கார்சார்
திருக்கறுத்து நன்மைச் சிறப்பெடுப்பர் கற்றோர்
கருத்தரி யென்புன்கவியிற்காண்.

## நூல்.

திருக்கச்சமாக்கலையாளருள் சேர்ந்திடச்சேர்திரைய
திருக்கச்சமால் கடற்சூழ் புவிமாய்கையிற் சிக்குறுவன்
திருக்கச்சமாற்றி நற்சீர்க்கதிதந்திடத்தேவர்பணி
திருக்கச்சமாநகர் வாழரன்றாள்வைப்பன் சிந்தையினே (க)

கச்சநகரரன் காவரிமாலயனங்கணங்கட்க்
கச்சநகர்ந்திடக் கார்விடமுண்டவன்கையினிலக்
கச்சநகர் முதற்றேற்றுங்கருணையன் கட்செவியார்
கச்சநகரைத் துதித்தே கருவினைகல்லுவமே (௨)

தண்ணம்பலவன் றிருக்கரம்பூண் பணித்தாமமுடித்
தண்ணம்பலவன் முழுவரிசார்ந்திடத் தாழ்குழன்மா
தண்ணம்பலவன் றனித்தாதர் செல்கதி தாழ்த்தினிற்குந்
தண்ணம்பலவன்ன மண்பணைக்கச்சையன்றாட்டுணையே (3)

வாரணவன்னிகர் மாமுலைபாகத்தன் வாட்கதைவில்
வாரணவன்னிகொள்ளாழியன் மாமடுவாழ்த்திநின்ற
வாரணவன்னிமிர்காய்கராக் காய்ந்தடுமாற்றுதிமா
வாரணவன்னி சொல்காக்கச்சநாதனை வாழ்த்துமினே (4)

தீர்த்தனம் போதன்று திமறைப்பாதனைத் தீயமலந்
தீர்த்தனம் பேர்கச்சைத்தேவினற் சீரடிதேடிவழுத்
தீர்த்தனம் பாரமிலவிதழ்த் தென்மொழித்தேமல்வழுத்
தீர்த்தனம் போர்வையுறுமாதரால்வருஞ்சீரெவையே (5)

அங்கமலம் புலித்தோலொடு மாமதியாத்திமலர்
அங்கமலம் பணிமாமறை வைத்தவவாணவம் போய்
அங்கமலம் பெறத்தீவினை நீக்கியளித்திடுவாய்
அங்கமலம் பணைக்கச்சையில் வாழ்திசை யம்பரனே. (6)

கரணகம் போழ்ந்தவன்போதன் பணியுங்கடவுளஞ்சக்
கரணகம் போதகன்றாதையன் காருறுகாயமணக்
கரணகம் பூண்பழிகூடலிற்றீர்த்தருள் கன்னிமன்சங்
கரணகம் போழ்கச்சைக்காவலன் சீர்ப்பதங் காணுமினே (7)

கரும்பரவைக்கிருட்சென்றவன் காணங்கருமமெலாங்
கரும்பரவைக்கங்கை தோயினுந்தீராக்கமழ்சொலல்குல்
கரும்பரவைப்பொருமானிடப்பாக னொர்காலெனுநி
கரும்பரவைக்குளிரான் கச்சைநோக்கிற் கரந்திடுமே (8)

அஞ்சக்கரவ யிலம்பிகை பாகன மலனொளிர்
அஞ்சக்கரக்கரனம் புயன்றேடி யடைவரிய
அஞ்சக்கரப் பொருளானே றுயர்த்தவனண் பதந்தான்
அஞ்சக்கரண்ட மனங்கச்சையா யெனிலார்ந்திடுமே (9)

கரு மந்திரிகரணம் மாறுமென்னையுங் காப்பையொசொல்
கரு மந்திரிநண்பன் கார்மிடற்றான் செம்மைகால் கனனி
கரு மந்தியண்மெயன் காலனைக்கொன்றவன் காதுகர்த்தன்
கரு மந்திகற் பகச்சோலையிற்றும் பொழிற் கச்சையனே (10)

பிரமங்கடிக் கொன்றைசூடிய பெம்மான் பிருந்தையணி
பிரமங்கடி மறைவேதியன் போற்றுறு பிஞ்ஞகன்றேர்ப்
பிரமங்கடி மதிற்சேர்கச்சை நாட்டிற் பிறக்குமுயிர்
பிரமங்கடி துறும் பின்பவை பூவிற் பிறப்பிலதே (11)

இலங்கயில் வேந்தனிரிந்திடக் கால்விரலாலிறுப்போன்
இலங்கயில் வேட்கரியத்தனன் போதனிரும்பதம்போ
இலங்கயில் மாற்பதமேற்பத மெய்துவ மெற்பதந்தோய்
இலங்கயில் வால்வளையார் பயில்கச்சய னென்றிடினே (12)

வனமுல்லை மாற்பணிமாமறைப் பாதன் மருவலர்தம்
வனமுல்லைசூடியன் வார்கருவேதனை மாற்றிவைக்கும்
வனமுல்லை நாரிவருமிடப்பாகனல் வாழ்வுமன்னும்
வனமுல்லையார் பயில்கச்சயிலாரடி வைக்கினுமே (13)

அரியனத்தன் பணிமாமலர்ப் பாதனரு நுதற்கண்
அரியனத்தன் றிருவம் பரவாடைய னூர்ந்தகுழை
அரியனத்தன் கருவையிற நிற்பவராரெனிலோ
அரியனத்தன் னிடமில்லாத கச்சையிலார்பவரே (14)

தனவனம் பார்விழித்தையற்கு நேசநற்றுக்கணங்கின்
தனவனம் பேரறுமார்ப னன்போற்றரன்றூர் குகனத்
தனவனம்பாய் பரித்தத்தையனுகந் தகித்தவன் சந்
தனவனம் பானுத்தகை தீர்க்குங்கச்சைத் தனிமுதலே (15)

புண்டரீகங்கடி நீங்காத யீமுறுபுண்ணியன்றீப்
புண்டரீகங்கடித் தோலாடை நாதனன் பூண்பணியன்
புண்டரீகங்கடி வார்கச்சநாதனைப் போற்றி செய்தோர்
புண்டரீகங்கடிக் காணுமையாரிடம் போகுவரே (16)

மாதண்டம் பங்கயநாபன் வெண்டாமரை மாதின்புறும்
மாதண்டம் போதன் மனங்கசிந்தேத்தரன் மாமலையார்
மாதண்டம் பம்மலஞ்சிக் குறுவான் செய்மனப்பிழைக்கு
மாதண்டம் போதுமினியாள் வைகச்சை மறைமுதலே (17)

திருக்கோவில் வாட்கரச் சீதரன் போற்று மஞ்சீர்ப்பரமன்
திருக்கோவில்லாத வந்தென்னையுமாள் வையொதிங்கள் செங்க
திருக்கோவில் தூம்புக்குளத்தமைப் போலுயிர் தீர்காலமுந்
திருக்கோவில்கொண்டிருங்கச்சையைக்கார்க்குந்திகம்பரனே(18)

சாரங்கம்பாணி மதியுறுங்கைமுடிச்சம்புவயன்
சாரங்கம்பாணி யணிதிருமால் பணிச்சங்கரன்மஞ்
சாரங்கம்பேணிப் புனைபவனன்றி கோற்சாஞ்சுரரைச்
சாரங்கம் சாய்த்திலங்கச்சையில்வாழ் சிவதற்பரனே (19)

அம்புயம் மால்விரி விண்ணரிதாத்திரியானவரன்
அம்புயம்மாலலை கொண்டவர் போற்றுமையானனமென்
அம்புயம் மாலொளியம் பகமூன்றுடையார் மலரன்
அம்புயம் மானிறவந்தரியார் கச்சை யம்பரனே (20)

கந்தரம்போதகமீன்றருள் தாதைகடவுள் நிர்த்தன்
கந்தரம்போகியுமிழ்விடன் நீவனங்கானிருந்துங்
கந்தரம்புக்கிளைத்தீர்பயனென் கருமங்கையுறுங்
கந்தரம்போங்காவளர் திருக்கச்சையைக்காணிடினே (21)

கண்டீரவம் புயற்காம் புறழ்ச்சொற்குழற்காலொளிதோள்
கண்டீரவம் பெணச்சொல்லியம் மாதர்கள்கண்ணலமுங்
கண்டீரவம்விடில்முத்தியிற் காயிரும்புண்டகம்போல்
கண்டீரவம் பொறைக்கச்சையன் வைத்துமைக்காப்பவனே (22)

காண்டமரிமுடிவேணியன் சங்கரன் காளகண்டன்
காண்டமரி திருக்கையுடைத்தேவர்கள் காண்பரியான்
காண்டமரிபெருவம்பரன் காணங்கருமமறக்
காண்டமரிதிரிக்கச்சையைக் காணிற்கதிதருமே (23)

அம்புலிங்கம் முதலீர்ந்துடைபாகவணிந்தவன்வெண்
அம்புலிங்கம் பையரவணிந்தோனடையாருறுதல்
அம்புலிங்கம் புன்னகையாலெரித்தவனணைவனம்
அம்புலிங்கம் பொன்னிசூழ்கச்சமங்கையிலாரணனே (24)

அங்கதம் பூண்பத்திருவாகு கொண்ட.வனார்வரைக்கீழ்
அங்கதம் மாயிடவூன்றிய தாளுடையத்தனொளிர்
அங்கதம் பூண்கச்சமங்கலன் சீர்சொலியார்ப்பதற்கு
அங்கதம் பம்மரைவேதனாவாய்ச்சதமாக்கிலனே (25)

சிந்தாரபாலையம் மாவலிபாற்றரைசென்றுகொளுஞ்
சிந்தாரமாலையனித்தலுங்தேடியன் சீர்மனங்க
சிந்தாரமாலையங் கொண்டவன் றீவினைதீய்த்து நிற்குஞ்
சிந்தாரமாலையஞ் செய்திருக்கச்சையன் சேவடியே (26)

ஆம்பலம் மாரதமாளுடன் கண்முலையார்தளவம்
ஆம்பலம் பார்விழிக்கான்மொழித்தேரல் குலாடகத்தோள்
ஆம்பலம் மாதரண் வேங்தொடுமேதையர்யாவரேனும்
ஆம்பலம் மாவிரிக்கச்சைதுன்னார்மிடியாதர்களே (27)

மாதவர்விண்டு மனமகிழ்ந்தேத்தரன் மான்மழுவான்
மாதவர்விண்டுவளைத்தவன் மாமலைமாதுலன்று
மாதவர்விண்டுவணை பொழிற்கச்சையன் மால்மதன்மா
மாதவர் விண்டுகரவிண்டு போற்றுறுமாமுதலே (28)

அம்போதகம்பிதாப் பாகனுன் காரணமாங் குதிரை
அம்போதகம் பௌவமால் மனைக்கல் மகளேங்கரமார்
அம்போதகம் மகவாயுறுங்கச்சையினரடிசேர்
அம்போதகம் பெறக்கார்மல நீங்கிட வண்ணுதுமே (29)

அம்பலவன்னிமிர் புன்மேதையம்பரனார்முடியில்
அம்பலவன் மலர்பூண்டவன் நம்வினையாழ்த்துமனல்
அம்பலவன் சினைமங்குலண் கச்சையை யாதரிக்கும்
அம்பலவன்னிய முண்டரைக் கார்க்கு நல்லையடியே (30)

முற்றுப்பெற்றது.

ஓம்பராசக்தியேநம.

கச்சமங்கலம் மீனும்பிகை

## உயிர் வருக்க மாலை.

### விநாயகர் காப்பு.

சீரார்கயலை நிகர்செவ்வரிக் கண்ணம்மையின்மேற்
பேராருயிர் வருக்கம்பேசவே—தாராருங்
கம்பத்தானைக் கையினுற் காயமிறக்காயமெறீ இக்
கம்பத்தானைக் கழலே காப்பு

### நூல்.

அம்மரப் பொழிலிற் சுகமொடு பிகமுமருந்தவராரணம் பயினு
மிம்மையிற் றுறக்கமென்பதோர் கச்சையெழினகர்தன்னகமிலங்கு
கொம்மை சேர்முலையாயரு மறைப்பொருளே கொடியிடைவாணியுஞ்சசியுஞ்
செம்மலர்த்திரு வுந்தினந்தினே பாதந்தெரிசிக்குங் கயல்விழியனையே (1)

ஆரணப்பொருளே நீனிறக்குயிலேயடைந்தவன்மலவழுக்களைநது
சீரணியுன்றன்பதமலர்துதிக்குஞ்சிறப்பினையறிவிலேற்களித்தாற்
காரணமேனிமாலயன்பதமுங்கருத்தினிலெண்ணிலேன்கயல்கள்
நீரணிவயலினுகளுறுங்கச்சைநிர்மலன்றுணைவியாமுமையே (2)

இன்னிலவாழ்வை மெய்யெனவெண்ணியிணையறுபொருளினைத்தேடிப்
பொன்னவிர்சுணங்காரிளமுலை மடவார்பொருட்டினல் மனமழிவேற்கு

நன்னயமானவுன் றிருப்பாதம்நாடொறுந்துதித்திடச்செய்வாய்
கன்னலமொழியாய்கயனிகர்விழியாய்கச்சையில்வாழ்சிவபரையே

சிவதுபுரியேனீவரையேனு மென்னிருவிழிகளிற்காணேன்
பாவகாரியங்களல்லது வேறோர்பழிப்பிலாக்கருமங்களறியேன்
சேவலங்கொடியோற்ற ருதிருமணியே சிறப்பிலாவென்மனத்திரு
[க்கைப்
போவது செய்வாய் கயல்விழிக்குயிலே பொன்மதிற்கச்சையர்
[தவமே (4)

உருவினிற்சிறந்தாயொப்பனையில்லா யோரறுமுகத்தனையீன்றாய்
திருவளர்பதத்தாய் முத்திரைக்கரத்தாய் தேவரைக்கார்க்குநற்றி
[ருவே
கருமுகிலகடுபோழ்ந்து விண்ணுருவுங்கந்தியின்றண்டலை சூழ்ந்த
பொருவருங்கச்சமங்கலத்தெவரும்போற்றிடவெளிவருமுமையே

ஊசியில்நின்றுங்கானிடைத்திரிந்துமுயருறுமலைப்புழைபுகுந்துங்
காசினிசுழன்றுவானிடைப்பறந்துங் கருத்திலாத்தவஞ் செய்து
[மிளைப்பீர்
தேசிலாத்தவத்தாற்பயனென்று மில்லை திருக்கறமனேலயமடைய
மாசிலாக்கச்சமங்கலத்தடைந்தே மாண்கயல்விழியடி தொழுமே

என்னுடைப்பொருள்களிவை யெலாமென்றுயேமுறுமறிவிலேற்
[கல்லார்
வன்மனச்செருக்குமறுபகையோடு வளருறுபழி முற்றுந்தீர்த்
[தென்

புன்னகந்தெளிய நன்னயஞானம் பொருந்திடத்திருவருள் செய்
[வாய்
பன்மலர்த்தடஞ்சூழ்கச்சையில் வாழும்பார்ப்பதிமீன்விழிச்சிவை
[யே (7)

ஏடகம்வைகையாற்றினிலெதிரே யேறிடச்செய்தவற்கியானைக்
கோடகத்தனத்தாலமுதினையூட்டுங்கொடியிடைமீன்விழிவிமலாய்
பாடகமுறுதாட்பஞ்சவன் மகளாய்ப்பார்முழுதடக்கின
நீடகலயமாயடக்கிடலரிதோ நீர்மலிகச்சைவாழருளே )

ஐயமென்றடைந்து தாருகவனத்தினருந்தவர்மனைவிகற்ப
மையணிமிடற்றான்வருதிருமனையாய் வளரறமியாவையுப் த்
ப்
செய்யபங்கையத்தை நிகர்திருமுகத்தாய் சேயனுன் ெ
[பொ ப்
பொய்யறுநினது பதமலர்தருவாய்பொறியுறுங்கச்சைவா

ஒள்ளியகயலையொவ்வுறும் விழியாயோதருங்கருணையங்க
தெள்ளியமனமார்வன்னியமுண்டார் திருமனமாலயங்கெ
பள்ளநீர்வயலிற்கடைசியர் மச்சம்பார்வை யினிழலெனக்
யள்ளியங்கையில்நாணுறுங்கச்சையணிநகரரசுசெய்யுமை )

ஓதநீர்க்கடல்சூழுலகினிலனை யருதரத்துட் கருவுருச்செ
பாதகம்புரிந்து பழியதற்கிடமாம் பாவையர் மாய்கையின
வேதனைப்படுமென்ன கவிருள் தனக்குவெய்யவனின் பத
வீதலையுறுமற்றெரிசனமருள்வாய்மீன்கொடிமீன்விழிவிம

ஔவியமகற்றுமருந்தவர்மனமேயாலயங்கொண்டினிதுறைவாய்
பௌவநின்றெழுந்தமலர்த்திருமகளும்பாமடந்தையுந்தொழுப
[தத்தாய்
கௌவையம்பொன்னிநதிக்கரைத்தென்பால்கச்சையில்வாழுறு
மடியேன்
நௌவிமீன் விழியாயறிவிலனெனினு மருள்வை நின்னளிர்மலர்
[ப்பதமே (12)

முற்றிற்று.

ஓம்சரவணபவ.

வேலுமயிலுந்துணை.

கச்சமங்கலம் சுப்பிரமண்யக்கடவுள்.

# இ ர ட் டை ம ணி மா லை.

---

கலிவிருத்தம்.

காப்பு.

தேனவாவிகள் சேர் கச்சமங்கல
மானகார்த்திகை மைந்தனை வாழ்த்திநல்
வானிரட்டை மன்மாலை வழுத்திட
யானை மாமுகத்தையனைப்போற்றுவாம்

## நூல்.

கம்பலை செய்யாலைகளுங் கன்னியரு மாவியினிற்
கம்மிக் குடைந்தாடுங் கச்சையே—மும்மதிற்காத்
தான குமரனார் சங்கைக்கி நல்கயிற்கை
யான குமரனார் ஆர்வு (க)

ஆர்வனமா லந்தியண்ணிய மேனியரன் சுதகட்
சேர்வனமாலிகை மான்மகற்குட்டிய சேந்தவிழி
பார்வனமார் வள்ளி பால்மொழிக்குஞ்சரி பார்த்து மகிழ்
கார்வனமார் கச்சை கார்த்திடுங் கந்தக்ருபாகரனே (உ)

கஞ்சங்கமார் செறுவுங்கம்மியர்கண்ணீண்மறுகுங்
கஞ்சம்முளரியுறுங்கச்சையே—விஞ்சுலகு
காக்குமரியங்குயத்தான் காளமயின்றோனருளும்
மாக்குமரியங்குயத்தான் வாழ்வு (3)

வார்வாரணமயிற் சக்கரங்கொண்டநன்மான்மருக
தார்வாரணமுலைபார் மயல்நீங்கிடத்தாள் தருவாய்
ஏர்வாரணக்கொடியேந்திய கந்தவிளந்தருக்காக்
கார்வாரணம்பயில்கச்சையில்வாழ்குககண்ணியனே (4)

கண்ணம்பாரானனமுங் கண்ணிபுனையாடவருங்
கண்ணம்புலிநிகராங்கச்சையே—கண்ணல்குங்
கஞ்சமனைவீட்டினார் கர்வமொழித்தேயசுரர்
வஞ்சமனைவீட்டினார்வாழ்வு (5)

வாள்கந்தனைபெறுமாலயன் வான்சுரர்வந்தமைய
நாள் கந்தனை வணங்கித்துதி நன்முதல் மைந்தனைவான்
நீள்கந்தநைவுறக்காவிரையார்கச்சை நிர்மலனை
வேள்கந்தனைத்து திப்போர்வாழ்வர்சென்மவிடாயகன்றே (6)

கண்ணிறையும் பூங்காவுங்காண் முனிவராயுளுஞ்சொற்
கண்மலியவஞ் சுகமார்கச்சையே—வண்பொனினால்
ஆக்குஞ்சரிமணந்தான் ஆர்மலர்க்கைவள்ளியொடு
காக்குஞ்சரிமணந்தான் காப்பு (7)

காத்திரவன்னிகர் மாமுலைவள்ளியின் காந்தவளர்
கோத்திரவன்னியம் மாற்றலையானவ கோப்பழனி
நேத்திரவன்னியண் காச்செறிசெந்தில நேடுமெற்குச்
சாத்திரவன்னிசொல்கச்சைய நற்கதிதந்தருளே (8)

தந்நிடையார் மாளிகையுஞ்சங்கரியா ரீன்றவருங்
கந்தக்கரும்புகையார்கச்சையே—அந்தவளக்
கார்வாரணக்கொடியார் கண்ட மிடைவள்ளிமகிழ்
சேர்வாரணக்கொடியார் சேர்வு (9)

சேதண்டம் பங்கயமில்லாகக் கொண்டருள் தேவைபருள்
கோதண்ட மால்மருகா நவகானவகோப்பழனி
வேதண்டக் கச்சையமாய் கையில் யான் செயுமேற் பிழைக்கு
மாதண்டம் போதுமினிப் பிறவாதொழி வார்குகனே (10)

வார்வாரணக்கதுப்பும் வள்ளியோர் மாக்கரமுங்
கார்வாருந் தானமுறுங் கச்சையே—நீர்வாருங்
காரப்ப யோதரத்தார் காவரியின் மாமகளின்
வாரப்ப யோதரத்தார் வாழ்வு (11)

வார்முல்லை யார்மயல் நீங்கிடவென்னக மாலடிவை
கார்முல்லை மாயவன்மால் மருகாகச்சைக் காங்கெயவேர்
ஆர்முல்லை மாலுமைக் காஞ்சுதவா ணிடிபோலசுரர்
சேர்முல்லை சூடிபமாமயின் மேலுகை செம்பதனே (12

செம்பலையு மாவணத்திற் சேர்ந்தொளிரு மாமணியுங்
கம்பலத்தி லக்குவருங் கச்சையே—அம்பலத்திற்
காலெடுத்தான் மாசடையான் கான்முளையாய்க் காணலர்மேன்
வேலெடுத்தான் மாசடையான் வீடு (13)

வீக்கணஞ்சேர் கடப்பைமாலை மார்பணி வேலவெழில்
தாக்கணங்காரரி மாமருகா மலர்சார்ந்து வளர்
காக்கணஞ்செய் மணிமின் மினிதானெனக் கண்டுநிதங்
தூக்கணங் கூடிறுக்குங் கச்சைவேற்குகத் தூயவனே (14)

தூயவிழா வீதிகளுந் தோகைமயிற் சாயலருங்
காயமொளிர் கற்படுக்குங் கச்சையே—யேயெண்
புசத்திற் காசைப் பட்டார் புத்திரனைப் வேள்வி
யசத்திற் காசைப்பட்டார் ஆர்வு (15)

ஆரம்பலந்தருமாபணி யேர்கலையாதரித்துப்
பேரம்பலநடஞ்செய்தவற்கோர் மறைபேசினவேள்
கூரம்பலமணி வேல்விழிக்கன்னியர் கூடுகுகச்
சீரம்பலநிறைமாமயின் மேலிவர்சேவகனே (16)

சேவகத்திண்யானைகளுஞ் செங்கோலார் மன்னவருங்
காவகத்திலேயாருங்கச்சையே—பாவவ்ழி
புக்கத்திருப்பார் புகழ்த்தொண்டரையாறு
பக்கத்திருப்பார்பதி (17)

பதிக்கச்சமங்கலப்பண்ணவன் பார்ப்பதிபாலனடுக்
குதிக்கச்சரோருகர்க்குட்டிய வேலவன் கும்பமுனி
துதிக்கச்சரவணந்தோன்றிய தோன்றலச் சூரர்கிளை
மதிக்கச்சமானவன் மாபொழிலேரகமன்னவனே (18)

வம்பளிக்குங்கூந்தலார் வாழில்லுஞ்செய்நிறையுங்
கம்பளிக்கஞ்சஞ்சாருங்கச்சையே—நம்படியார்
மோகமவித்தார் மொழியாரணஞ்சுருதி
ஆகமவித்தார் அரண் (19)

அரவிந்தமாபணைச்சூழ்திருக்கச்சையனார் குழலேழ்
சுரவிந்தர் போற்றுறுமால் மருகன் பவத்தூணறுக்கும்
வரவிந்தமாழ்த்தவன் றேசிகன்வாள்சடைமாவுலகு
பரவிந்தனச்சுமை கொண்டவன் பாலன்பதாம்புயமே (20)

சங்கரன் சத்திவேலன்றாமரைச்சரணம்வாழி
பொங்கெழிற்றமிழும் வாழி பூசுரர்கோக்கள்வாழி
தங்குசெங்கோலும் வாழி சங்கநற்கச்சைவாழி
திங்கண்மும்மாரிபெய்து செகதலம்வாழி மாதோ

(உமாமகேசனெழிற்கந்தன் உபயதிருவடி தினம் வாழ்க)

மும்மாலையுமுற்றுப்பெற்றது

சண்முகநாதன்றுணை

சுப்பிரமண்யக்கடவுளாகிய
* தெய்வத்தலைவன் மாட்டுமோனிடப்பெண்ணயப்பாந்துறைகள்

## துறைகள்

---

கத்திகைக்கும்பாரரி சூழ்காங்கெயனே காதன்முலைக்
கத்திகைக்கும்பம்மருட்டுங்கார் குழற்கொல்—வித்துமுலைக்
கத்திகைக்கொண்டீர்ந்ததைப்போற் காமனெய்புண்காணுமுலைக்
கத்திகைக்குமென் பெணினைக்கார் (1)

---

* தலைவன்கைக்கிளைக்காமம் முதலியதுறையிருப்பினும் பெரும்பான்மை நோக்கி இப்பெயரிடலாயிற்று

கைத்தாமரைக்கணுமென்மகள் கச்சைக்கடப்பையின்மு
கைத்தாமரைக்கணவன்னெனுங் கோதொழுங்காலரியு
கைத்தாமரைக்கணவாளியன் போரஞ்சுங்காணெமகங்
கைத்தாமரைக்கணமஞ்சுகமாயின காரிகைக்கே (2)

அரிவையம்பாகவரனொரு மூன்றையழித்தவனை
அரிவையம்பாகன் சுதன்குகன்கச்சையணிவரையில்
அரிவையம்பாகவிப்பெண்மலராளோ வரமகளோ
அரிவையம் பாகடர் சொல்லியொவென்னையறைவதுவே (4)

மானத்தரக்கு மணியணிவோர்மலை மாமருகர்
மானத்தரக் குவரியடையார் சுதர்மாமயில்வி
மானத்தரக்கு வனமான பாங்கி செல்வாய்தருவாய்
மானத்தரக்கு மரைதுயிற் கச்சையம்மான் றழையே (5)

தங்கமுகந் தமுலைமடவீர் தளர்வேற் கொல்லா வேனிலன்மா
தங்கமுகந் தண் பெருநோக்காண்றம்பி மகிழ்வாலினிதுறையுந்
தங்கமுகந் தறலைவீசுந் தரங்கப்பொன்னிக் கயல்மகரந்
தங்கமுகந் தண்டலைசேர் கச்சையினிலிலையோ சாற்றீரே (6)

மச்சங்கடவா வலைகடல் வெண்மதியார் மந்தானிலமுந்தற்கா
மச்சங்கடவா தனைகளினால் மயங்கு மலர்க்கு மனங்கொள்ளு
மச்சங்கடவா ரணமுலையீர் மம்மர் நோயைத் தீர்த்திடத்தா
மச்சங்கடவா ளரிமருகன் மார்பின் மலரைத்தந்திடுமே (7)

சந்தக்கும்பத் திளமுலைமானனுள் சரீரமெங்கு மனங்கசவேளர
விந்தக்கும்பத் தனைகோடியாசுக மேறமெல்லியல் வெய்துயிர்ப்
[பாளையோ
அந்தக்கும்பத் தயலிற்கஞ்சம் பொழியன்னப் பேட்டைக்
[கடைக்கணிற் பாரையா
பந்தக்கும்பக் குறுமுனிதேசிகா பழனஞ்சூழ் கச்சமங்கைக் கங்
[தேசனே (8)

கோட்டுவாரணத்தைப் பகை செய்துமோர் குலிகச்செப்பினைத்
[தோழமை கொண்டுநல்
மோட்டுவாரணக் கொங்கையிர் மன்மத மோகனுசுக மேறிடு
[தையய்யோ
வேட்டுவாரண முத்தை மரைவைக்கும் வெள்ளநீர்ப்பணை சூழ்
[திருக் கச்சைபோய்ச்
சூட்டுவாரணக் கேதனத்தார்முன் பென் சோர் விலாமனுச்
[சொல்லுஞ் சுருக்கினே (9)

மாவிக்கஞ்சம் புகைகளினீங்குறு மாரன்போரினிற் பாலனமோ
[பச்சை
காவிக்கஞ்சமுறு பண்கள் காளமேகளிர் கடற்கு நடுங்குறுவே
[னிந்தப்
பாவிக்கஞ்சப் பறவையே நீ சென்று பாதபங்கயத்திற் சிரந்
[தாழ்த்தியே
காவிக்கஞ்ச வயற்கச்ச வேளிடங்காதல் சொல்லிக் கடப்பை
[தருவையே (10)

சங்குசக்கர மாயன் மருகனே தாழ்கருங்குழற்பால் மொழிப்
[பாசக்க
சங்குசக்கரவாமிடைத் தோளமைதந்த முத்திதழ்த்துப் புச்சுரி
[கைம
சங்குசக்கரவேலெழிற் பெண்ணினைச்சார்ந்து சேர்வதுன் பார
[மலர்ப்பங்க
சங்குசக்கரண்டங்க ளொழிவுருத் தண்பணைக்கச்சைச் சண்முக
[நாதனே.

சங்கத்தத்தையுறவும் வனை துகில் தளர் நுசுப்பினிற் றங்கவும்
[வேள்விடு
புங்கத்தத்தை யொழிக்கவுங் குஞ்சரி பூங்குறத்தியைப் போல்
[மகிழ் வெய்தவும்
பங்கத்தத்தைப் பரைக்களித்தோனருள் பாலகந்தனிடத்தினிற்
[கச்சையார்
துங்கத்தத்தையே சென்று மலர்தந்தால் தொழும்பர் போலத்
[தொழுவேனுனுன்னையே

சங்கராவையம் மூடியதோவருதபனன்றன்னைப்பரிரதத்தோடும
சங்கராவையம் பல்வாயகட்டினைச்சாரவுண்டனனோ கரிக்காககச்
சங்கராவையடுவோன் மருகனைச்சந்திப்போர்களைக்காண்கிலனே
[ராமா
சங்கராவையய்யோ திருக்கச்சையில் சம்பராரியின் சண்டைபொ
றுக்கேனே (12)

வண்டுளவம் புயமுகத்தாளனத்தை யுண்ணுள் வளை துகிலு மரு
[ங்கிலுருவண்கைநில்லா
வண்டுளவம்படப்பொழிந்தான் மதனன்வாளிமழையின் மேல்
[மும் மடிதான்வேளேகந்தா
வண்டுளவம் படுபுயத்தான் மருகாயானைமகள் கணவாகாங்கெய
[னேவாளைமீன
வண்டுளவம் பூங்காவி மலருங்கச்சை வரோதயனே பென்றழை
ப்பீர் வாட்கணீரே (13)

அம்பலத்தளவங்கெடவுவந்தாடுமையரினகத்துறைவிசாகா
அம்பலத்தளவமுகை நிகராகாவருஞ்சிறுவென்மகள நங்கன்
அம்பலத்தளவம்பணைமுலைகிழிக்கவலருவள் புலருவளயலார்
அம்பலத்தளவம் மறுகினில் வருமுன் அளித்திடுவாய்மலைவேளே

கடப்பையரியிலாத கண்ணுள் காமராஜன் கரியரிக்குங்கவிகைக்கு
[மாற்றுளம்பு
கடப்பையரிகுழையென்பெண்ணினிமேற் கண்டால்கருத்தழிந்து
[யிறந்து படுமதற்குள்ளாகக்
கடப்பையரிகடிதடத்தீர்கச்சை சென்றுகந்தனிடமன்றுடிக்கள்
[ளார்ந்தோடுங்
கடப்பையரிமாலைதந்தால் விரகநோயைக்கரிக்கலா மிவளையுபசரிக்
[கலாமே (15)

சந்தனத்தைக்கொட்டியடிசகிகாள் பூங்கச்சந்தனத்தைநோய்செ
[ய்தற்றகுமாமாவு
சந்தனத்தையணிகரத்தோனருளெழில்வ சந்தனத்தைநிறமாகு
[மெனதுமெய்க
சந்தனத்தை யயிலேலேனேற் போர்க்குப்பூரி சந்தனத்தையளிகரத்
[துக்கச்சையோனை
சந்தனத்தைக்கடாவிவரச்சொன்னாற்சென்ற சந்தனத்தை நினை
[ந்தழூங்கேன்தையலீரே (16)

வெங்கடாசலவிந்ரன் முதலினோர் மெய்ப்பயம் விடக்கைபிற்றி
[ரட்டியே
வெங்கடாசலத்தைச் செயாப்போனகன்மெய்ச்சுதன்மன்மதாவெ
[ணைச்செய்தது
எங்கடாசலசப்பணைக் கச்சைவேள் எனக்களித்தனர் மாலையினி
[யுன்போர்
எங்கடா சல மெங்கடாபாங்கியா லெருத்தமுந்துவெனோடு கடக்
[கவே (17)

கண்டரங்கம்பொழியுதுமெய் நனிகசங்கி வாடுதுகாமன்றனம்புவ
கண்டரங்கம்மனையிடமாகுது கையெடுத்து வணங்குவேன் கச்
[சையைக்
கண்டரங்கம் பொழினிறைமேகங்காள் கருதிச் சொல்வீரென்
[காதையைப் பத்திமார்க்
கண்டரங்கம் பிதிர்ந்திடாதே மனைக்காயுமைச் சுதன்கந்தன்றிரு
[முனே (18)

ஓதரத்தையிட்டறுத்த வடிவேற்கண்ணூருறு விவாகத்தில்வந்துக
[ளைத்ததீக்குண்
டோதரத்தைப் பசிதணித்தோன் சுதனைக்கச்சையுற்றழைப்பாரி
[வண்காரணேன்றிதலையார்ப
யோதரத்தைக் கிழித்திடவுமேனியெல்லாமூறு புண்ணாயிடவு
[ஞ்சங்கராவை
யோதரத்தைப் பொருந்தாதயிவள்மேற் காமனொன்றல்ல பல
[பாணமுடற்றினனே (19)

கச்சமங்கலவெள்ளருவிக்குன்றிற் கண்ணுறக்கங் கொளாமலெ
[மையெலாங்
கச்சமங்கலப்பெண்ணயராமலே கந்தகந்தவென்பாள் வளையாழி
[யுங்
கச்சமங்கலங் கொண்டிடாளித்தி காமன்மீசைமுறுக்கிச் சிலை
[யிற்புங்
கச்சமங்கலப்பானெனிற் பொன்றிடுங் கடைக்கண் பார்திருவே
[ரகநாதனே (20)

முற்றிற்று.

உ

சிவமயம்

கச்சமங்கலம்

அம்பலகாரரும் இந்நூலாசிரியருமாகிய

ஸ்ரீமான்

சோ. சிங்காரவடிவேல்வன்னியமுண்டார் அவர்கள் சமுகத்துக்கு

திருவேட்டகல்லூர்

ச. அப்பாசாமிக்கவிராசர் அவர்களால் இயற்றப்பட்டது.

## கவி

வங்காரவடிவேலைக்கொண்டு கிரவுஞ்சவஞ்சவரையை யீர்ந்தோன்
சங்காரவடிவேலைக் கரைக்கணத்தின் மறைமொழிந்தோன் சலச [மென்னுங்
கொங்காரவடிவேலை யிரண்டினுமேதுதித்து நற்பாக்கூறுதேச்
சிங்காரவடிவேலைப் புவியிலகத்தியனெனவே செப்புவோமே

## இரதவெண்பா

மாயைதனில் வீழாமால் மன்னிபசொற்சோராமல்
வேயடியிலானவரின் வீச்சரணை—நேயமுற்றுங்
காலங்கண்மூன்றுங் கருதிப்பூசித்தநலன்
வாலசிங்காரவடிவேல்

வேறு.

கொங்காரங்கொன்றைமதி நதியருகுபுனைவேணிக் குழகனீன்ற
தங்காருங்கடம்பணியுந் தடப்புயச்செவ்வேள்பதங் கடலையின்
மேற்கொண்
டிங்காரங்காரெங்கு மிலங்குருகனே துணையென்றெண்ணிவாழுஞ்
சிங்காரவடிவேல் வன்னியமுண்டார்க் கிரு பொருளுஞ் சிறக்கமா
[தோ

ஆ. சத்திவேற்பிள்ளை இரங்கூன்

இஃது

இந்நூலாசிரியர்

ச. அப்பாசாமிக்கவிராசருக்கெழுதியனுப்பிய

## இரதவெண்பா

பூநற்றமிழறிவால் போற்றுமுனிவனைப்போல்
மானுமிலஞ்சிசால் மாநகரராச்——சானுரைத்தார்
மாபாக்கள் யான்பயப்பேன் மாற்றிரதப்பாபாடு
வாபாரப்பாச்சாமிமால்